
# குடும்பச் சிலுவைப்பாதை



# Stations of the Cross

எங்கே சுமந்து போறீர், சிலுவையை நீர், எங்கே சுமந்து போறீர்.
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க, எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறி போலே, துக்கத்துடன் வருந்தி, எங்கே போகிறீர்

2. பாரச்சிலுவையை நீர், பாசத்துடன் அணைத்து,
பாவத்தின் சுமை தாங்கி ஆர்வத்துடன் நடந்து, எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையாய்ச் சுமந்து, எங்கே போன்றீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த, எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள வீரமிழந்து
சீரோன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து, எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும், எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து, எங்கே போறீர்

8. புண்ணிய பெண்மணிகள், புலம்பி அழும் வேளை
தேற்றுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து, எங்கே போறீர்

9. தூரவழிச் சிலுவை தாங்கப் பெலமுமின்ற
மூன்றாம் முறை தரையில், முகம்படிந்தெழுந்தும், எங்கே போறீர்

10 நீடடாடை கழற்றவே, கோடிக் காயங்களலே
இரத்தமாறாய்ப் பெருக, வேதனையால் வருந்தி, தூயா நின்றீர்.

11 நீட்டிய கை கால்களில, நீண்ட இரும்பாணிகள்
நிஷ்டூரமாய் அறைய, நேசத்தினாலே வெந்து பலியானீர்.

12 சிலுவைப பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
நேசப் பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலியானீர்.

13 உமது மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழுசோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்.

15 கல்லைறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.

## முன்னுரை:

இக்குடும்பச் சிலுவைப்பாதை நீங்கள் குடும்பமாகச் சேர்ந்து சிறிது நேரம் அமைதியான முறையில் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கவும் சிந்திக்கவும் வாய்ப்பு. தொடங்கு முன் சில குறிப்புகள்:

- உங்கள் குடும்பத்தினர் புதுமையான அனுபவம் பெற ஒவ்வொரு வாரமும் வித்தியாசமான படங்களைக் கொண்டு உங்கள் இல்லத்திலோ அல்லது வழக்கமாக ஆலயத்திற்கோ சென்றோ இச்சிலுவைப்பாதையை செய்யலாம்.
- இயேசுவின் பாடுகளையும், இறப்பையும், உயிர்ப்பையும் பற்றி ஆழ்ந்து சிந்திக்க இது ஒரு செப முயற்சி என்றுணர்ந்து பக்தியுடன் பங்கேற்கவும்.
- உங்கள் வசதிக்ககேற்ப, நீங்கள் எல்லா நிலைகளை ஒரே நாளிலோ, வெவ்வேறு நாள்களில் சில நிலைகளையோ செய்யலாம்.
- ஒவ்வொரு நிலைக்கு முன்னர் அந்த நிலைக்குறிய படத்தை உற்று நோக்குங்கள். பின்னர் செபத்துடன் சிந்தித்து, உங்கள் மனதைத் தொட்டவற்றை, படத்தில் உள்ளவர்களுடன் உன்னை ஒப்பிட்டு, இயேசு உனக்குக் கூற முயல்வதை அறிந்து நன்றியுணர்வுடன் செய்யவும்.

## தேவையானவை ஃ சுற்றுச் சூழல்

- 14 நிலைகளுக்கான சிலுவைப்பாதைப் படங்கள்
- முதல் 12 நிலைகளுக்கு மெழுகுவர்த்திகள்
- அறையை இருட்டாக்குங்கள்
- செபத்தைப் படிக்கும் அளவுக்கு வெளிச்சம் இருந்தால் போதும்.

## தொடக்கச் செபம்

முதல்வர்: பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே.
எல்லாரும்: ஆமென்!

முதல்வர்: இயேசுவே இறைவா, எங்களைத் தூய்மையாக்க சிலுவையில் உம்மை முழுமையாகக் கொடுக்கும் அளவுக்கு எங்களை அன்பு செய்தீர். வானகத் தந்தை தூயவராய் இருப்பது போல் நாங்களும் தூயவர்களாயிருக்க விரும்புகிறோம். இச்சிலுவைப்பாதை மூலமாக நாங்கள் தூய வழியில் நடக்க வரம் தாரும். ஆமென்.
எல்லாரும்: ஆமென்!

முதல் 12 நிலைகளுக்கான மெழுகுவர்த்திகளை ஏற்றுங்கள்.

# முதலாம் நிலை:

இயேசுவைச் சாவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள்



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

தலைமைக்குருக்களும் பரிசேயர்களும் இயேசுவைப் பிலாத்துவுக்கு முன் கொண்டு வந்துள்ளனர். அவர் குற்றமற்றவர் என்றாலும் யாரும் அவருக்காக முன் வரவில்லை. பிலாத்துவால் எதுவும் செய்ய முடியாத நிலை. வேறு தொல்லைகள் வரும் முன் இயேசுவை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கிறான்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

உங்களை யாராவது மோசமாக, புண்படுத்தும் வகையில் தகாததை, பொய்யானதைச் சொல்லி இருக்கிறார்களா? அப்படியென்றால் உங்கள் மன வேதனை என்ன? நீங்கள் பயந்தோ, புண்பட்டோ, கோபப்பட்டோ, வருத்தப்பட்டோ இருந்திருக்கலாம். இப்போது உங்கள் மனதை இயேசுவிடம் காட்டுங்கள். நீங்கள் மன வேதனையுற்ற போது இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். பின்னர் "இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்" என்று சொல்லி செபியுங்கள். கடவுள் எப்போதும் என்னுடன் இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்த இயேசுவிடம் உதவி கேளுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

முதலாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# இரண்டாம் நிலை:

இயேசு தம் சிலுவையை சுமந்து செல்கிறார்.



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவைச் சாட்டையால் அடித்துத் துன்புறுத்தி, காறி உமிழ்ந்து, எள்ளி நகையாடி முடித்த பின் அவரைக் கொல்ல கொல்கொதா மலை நோக்கி பாரமான சிலுவையை சுமந்து செல்ல வற்புறுத்தினார்கள்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

மிகவும் கடினமான நிலை உங்களுக்கு ஏற்பட்டதுண்டா? யாராவது உங்களையோ உங்கள் உறவினரையோ மரியாதையுடன் நடத்தவில்லையா? சில வேளைகளில் நாம் நினைக்கும் வண்ணம் செயல்கள் நடப்பதில்லை. இப்படிப்பட்ட நேரங்களில் நம் மன நிலை என்ன? அந்த மன நிலையை இயேசுவிடம் காட்டு. இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். "இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்" என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

இரண்டாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# மூன்றாம் நிலை:

இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

சிலுவைப் பாரம் தாங்க முடியாமல் இயேசு முதல் முறை கீழே விழுகிறார். சிலுவைப் பாரம் தோள்களை அழுத்த, கற்களும் முற்களும் பாதங்களைப் பதம் பார்க்க, மக்கள் கூட்டம் முந்தித் தள்ள, படைவீரர்கள் அடித்துத் தள்ள, சோர்வான இயேசு கீழே விழுகிறார்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

விழுந்தால் காயப்படுவோம். தவறு செய்வது விழுவதற்குச் சமம். சில வேளைகளில் நாம் தவறி விழுந்தால் மனமும் வேதனைப்படும். நீ என்றாவது தவறி விழுந்தபோது மனம் வேதனைப்பட்டதுண்டா? அந்த மன வேதனையை இயேசுவிடம் காட்டு. இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

மூன்றாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# நான்காம் நிலை:

இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசு தன் தாயைச் சந்திக்கிறார். குரோதக் கூட்டத்தினூடே அதோ தன் மகனை நோக்கிவாறு நிற்கிறாள். தாயும் மகனும் தத்தம் வேதனையை அறிய முடியும். அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என அறிவர், ஆனால் ஆறுதல் படுத்திக் கொள்ள முடியும்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

நீ வேதனையடைந்த வேளைகளை நினைத்துப் பார். அந்த வேதனையை இயேசுவிடம் காட்டு. இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். "இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்" என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

நான்காம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# ஐந்தாம் நிலை:

இயேசுவின் சிலுவை சுமக்க சீமோன் உதவி




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

கல்வாரி செல்லும் வழியில் எருசலேமுக்குச் சென்று கொண்டிருந்த சீரேனே ஊரைச் சார்ந்த சீமோனை படைவீரர்கள் இழுத்து வந்து சிலுவை சுமக்க வைத்தனர். இருவரும் சேர்ந்து சிலுவையை சுமந்து சென்றனர்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

பல்வேறு காரணங்களுக்காகப் பிறருக்கு உதவுவதென்றால் நமக்குக் கடினம் தான். சில வேளைகளில் நம் வேலையையே நாம் முடிக்காமல் இருப்போம் அல்லது சிலருக்கு உதவ மனம் வராது. உங்கள் உதவியை நாடி வந்த ஒருவருக்கு நீங்கள் உதவ மறுத்ததுண்டா? நீங்கள் உதவிய நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். அவர் உங்கள் காதுகளில் ‘‘உதவியதற்கு நன்றி’’ என்றுரைத்ததைக் கேட்டீர்களா? ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

ஐந்தாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# ஆறாம் நிலை:

இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார்



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவின் முகம் வெப்பத்தால், சோர்வால், வியர்வையால், தூசியால், இரத்தக் கறை படிந்து வாடிக் கிடக்கிறது. இரக்கமுற்ற வெரோணிக்காள் கூட்டத்தின் நடுவிலிருந்து அவரது முகத்தைத் துடைக்க முன்வருகிறாள்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

நாம் சில வேளைகளில் செய்த உதவி நமக்குச் சிறிதாக அல்லது முக்கியமற்றதாகத் தோன்றலாம். தாகமுற்றோருக்குத் தண்ணீர், பாரம் சுமக்கக் கை கொடுத்தல், சோகமுற்றவரைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு, இவை சின்னஞ்சிறிய உதவி என்றாலும் நம் மனதில் சிறு நெகிழ்வைத் தரும். அந்த மனநிலையை இயேசுவிடம் காட்டு. இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். அவர் உங்கள் மனதில் தன் உருவத்தைப் பதித்து "என்னே உன் மனது" எனப் பாராட்டுவதை உணருங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

ஆறாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# ஏழாம் நிலை:

இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார். சிலுவையின் பாரம் கூடிக்கொண்டே இருக்கிறது. கூட்டத்தினரின் கூச்சலும் படைவீரர்களின் கூப்பாடும் நிலையை மோசமாக்கியது. எழுவதற்குக் கடினமாக இருந்தும் எழுந்து முன் செல்கிறார் இயேசு.

இயேசுவை உற்று நோக்குவோம்.

ஏதாவது செய்வதில் கஷ்டப்பட்டதுண்டா? இயேசு இரண்டாம் முறை விழுந்த போது அனுபவித்த வேதனையைப் போல் அது இருந்ததா? அந்த மன வேதனையை இயேசுவிடம் காட்டு. இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். இயேசு உங்கள் மன வேதனையை அறிவார்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

ஏழாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# எட்டாம் நிலை:

இயேசு எருசலேம் மகளிரைச் சந்திக்கிறார்




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

பெருந்திரளான மக்களும், அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, ‘‘எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழ வேண்டாம். மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்’’ என்றார்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

நம்மைப் பற்றி நினைப்பது சுலபம். பல வேளைகளில் நம் பிரச்சனைகள் நம் கண்களை அடைத்து விடுகின்றன. பிறரைப் பற்றி நினைக்கக் கூட நேரமில்லை. உங்களைப் பற்றி மட்டுமே நினைக்கும் நேரங்களில் உங்கள் மனநிலை என்ன? அந்த மனநிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள். இயேசுவிடம் உள்ள பிறரை நேசிக்கும், உதவும் மனது நமக்கும் தேவை.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

எட்டாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# ஒன்பதாம் நிலை:

இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசு மீண்டும், மூன்றாம் முறை கீழே விழுகிறார். இப்பயணம் நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கிறது. பெரும் தைரியத்தோடும் சகிப்புத்தன்மையோடும் இயேசு நமக்காக, எந்த வேதனையையும் பொருட்படுத்தாமல், கல்வாரி நோக்கிச் செல்கிறார்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

எழக் கடினமாக இருந்தாலும் இயேசு மீண்டும் எழுந்து செல்கிறார். சில வேளைகளில் நாம் என்னதான் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டாலும் வெற்றி பெறத் தவறி, அச்செயலைக் கைவிட்டுவிடுகிறோம். நாம் செய்யும் செயல்களைக் கண்டு சிலர் கோபப்பட்டிருப்பார்கள் அல்லது எள்ளி நகையாடியிருப்பார்கள். நீங்கள் இவ்வாறாக சோர்வுற்று மனம் நொந்து துக்கப்பட்டதுண்டா? அந்த மனநிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

ஒன்பதாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# பத்தாம் நிலை:

இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக் கொண்டனர். அந்தஅங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, ‘‘அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்கும் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்’’ என்றார்கள். ‘‘என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்’’ என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.

இயேசுவை உற்று நோக்குவோம்.

உனக்குப் பிடித்தமானவற்றைப் பகிரவோ கொடுக்கவோ கடினமாக உள்ளதா? எல்லாவற்றையும் உனக்கே வைத்துக் கொள்ள நினைத்ததுண்டா? உனக்கும் பிறருக்கும் இடையே தீய உணர்வுகளையும் தீய சொற்களையும் பறிமாறக் கொள்ள உன்னுடைய ஏதாவது காரணமாக இருந்திருக்கிறதா? இப்படிப்பட்ட வேளைகளில் உன் மன நிலை என்ன? அந்த மன நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

பத்தாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

# பதினோறாம் நிலை:

இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

அவரைச் சிலுவையில் அறையும்போது காலை ஒன்பது மணி. அவரது தலைக்கு மேல் ‘‘நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்’’ என்ற குற்ற அறிக்கை தொங்கியது. அவரது வலமும் இடமும் குற்றவாளிகள் இருவரைச் சிலுவையில் தொங்கவிட்டனர். அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். அவரைத் தாண்டிச் சென்ற பலர் வெறுப்புடனும் கேலியுடனும் நகைத்தனர். அவரைச் சிலுவையில் அறைந்த படைவீரர்களையும், எள்ளி நகையாடினவர்களையும் இயேசு வெறுக்காமல் அவர்களை மன்னித்தார்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

உன்னை யாராவது தகாத செயலாலோ சொற்களாலோ வேதனைப்படுத்தியதுண்டா? உனக்கு அவர்களை மன்னிக்கக் கடினமாக இருந்ததா? மன்னிப்பமு கடினம் என இயேசுவுக்கும் தெரியும். அதனால் பிறரை மன்னிக்க உன் மனதை மாற்ற இயேசுவிடம் மன்றாடு. ‘‘இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்’’ என்று சொல்லி செபியுங்கள். அதன் பின் உன் மனம் எப்படியுள்ளதெனப் பார்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

பதினோறாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள்.

## பன்னிரண்டாம் நிலை:

இயேசு சிலுவையில் தன் ஆவியைக் கையளிக்கிறார்



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

நண்பகல் வேளை. பிற்பகல் மூன்று மணி வரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. ஆலயத் திரை இரண்டாகக் கிழிந்தது. மூன்று மணியளவில் இயேசு, "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார். மௌனமாக செபிப்போம்.

பன்னிரெண்டாம் மெழுகுவர்த்தியை அணையுங்கள். படிப்பதற்கான விளக்கைத் தவிர உங்கள் அறை இருளில் இருக்கட்டும்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

நீங்கள் ஏதாவது ஒன்றைத் திறம்படச் செய்ய நினைத்ததுண்டா? மேலும் கடினமாக முயற்சித்தால் அதைச் சிறப்புற மாற்றியிருக்க முடியும் என நினைத்ததுண்டா? அல்லது கடின முயற்சி இல்லாததால் தான் அச்செயல் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டதென நினைத்ததுண்டா? அந்நேரத்திலுள்ள மன நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இந்நேரங்களில் இயேசு உங்களை அன்பு செய்ததைப் பாருங்கள். "இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்" என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

# பதிமூன்றாம் நிலை:

சிலுவையின் அடியில் இயேசுவின் உடல்



முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டு போகப் பிலாத்திடம் அனுமதி கேட்டார். பிலாத்தும் அனுமதி கொடுத்தான். யோசேப்பு வந்து இயேசுவின் சடலத்தை எடுத்தார். உயிரற்ற இயேசுவின் உடலை அன்னை மரியின் மடியில் கிடத்தினர். "உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும்" என சிமியோனின் கூறிய வார்த்தைகளை மரியாள் எண்ணிப் பார்த்தாள்.

இயேசுவை உற்று நோக்குவோம்.

நீங்கள் நேசித்த ஒருவர் இறந்துள்ளாரா? இப்போது நீ அவரை நினைத்துப் பார்த்தால் உன் மன நிலை என்ன? அந்த மன நிலையை இயேசுவிடம் காட்டுங்கள். இறந்த அந்நபரில் நீங்கள் எதை இழக்கிறீர்கள்? உன் மன நிலையை இயேசு அறிவார், உங்களையும் அன்பு செய்வார். "இயேசுவே, என் மனதை உம் மனதைப் போலாக்கும்" என்று சொல்லி செபியுங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

# பதினான்காம் நிலை:

இயேசு நாதரைச் சாவுக்குத் தீர்வையிடுகிறார்கள்:




முதல்வர்: திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எல்லாரும்: ஏனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகை மீட்டு இரட்சித்தீர்.

யோசேப்பும் நிக்கதேமுவும் இயேசுவின் உடலை எடுத்து, குளிப்பாட்டி, நறுமணத் தைலத்தைப் பூசி, புதிய துணிகளில் பொதிந்து, யூத முறைப்படி கல்லறையில் அடக்கம் செய்தனர். பின்னர் யாரும் உள்ளே நுழையமுடியாதபடிக்கு பெரிய கல் ஒன்றை வாயிலில் வைத்து அடைத்தனர்.

இயேசுவை உற்று நோக்குங்கள்.

சோகத்துடன் "சென்று வாருங்கள்" என்று யாரையாவது ஒருவரை வழியனுப்பிய ஒரு சம்பவத்தை நினைவில் கொண்டு வந்து, அப்போது உங்கள் இதயத்தின் நிலை எப்படி இருந்ததென இயேசுவிடம் கூறுங்கள். இந்தச் சோக நிலையில் இயேசு உங்களை அன்போடு அரவணைப்பதை உணருங்கள்.

பரலோக செபம், அருள் நிறைந்த செபம், தமத்திருத்துவப் புகழ்.

முதல்வர்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

எல்லாரும்: எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

முதல்வர்: மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவனவாக.

எல்லாரும்: ஆமென்

## நிறைவு செபம்:

முதல்வர்: கிறிஸ்து இல்லாமல் உலகம் இருளில் மூழ்கியது. இயேசு இறந்த போது எல்லாம் நம்பிக்கையற்ற நிலை. இது முடிவல்ல என நமக்குத் தெரியும். மூன்றாம் நாள் மரணத்தின் பிடியினின்று உயிர்தெழுவார் என நமக்குத் தெரியும். உயிர்த்த கிறிஸ்துவின் ஒளி சாவை அழித்து நமக்குப் புது வாழ்வளித்தது.

குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து சொல்லவும்:

அன்பு இயேசுவே! கடவுளின் ஆட்சியை இவ்வுலகில் கொணர நீர் வந்தீர். உமக்கு எதிராகச் செயல்பட்ட தீய சக்திகள் உமக்குக் கொலைத் தண்டனை விதித்த போதிலும், நீர் சாவின் மீது வெற்றி கொண்டீர். எங்களைப் பாவத்தின் அடிமைத் தளையிலிருந்து விடுவித்து எங்களுக்குப் புதுவாழ்வு தந்தீர். உயிர்த்தெழுந்த ஆண்டவராகத் தந்தையின் வலம் அமர்ந்து எங்கள் அரசராக ஆட்சி செய்கின்றீர். "உலகமுடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று வாக்குறுதி அளித்துள்ளீர். உமது அன்புச் சீடராக நாங்கள் வாழவும், நீர் சென்ற வழியில் நடக்கவும் எங்களுக்கு அருள்வீராக. ஆமென்.

**********

எனக்காக இறைவா எனக்காக இடர்பட வந்தீர் எனக்காக

1. பழிகளை சுமத்தி பரிகசித்தார் - உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்

2. தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் - உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்

3. விழுந்தீர் சிலுவைப் பளுவோடு - மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு

4. தாங்கிட வொண்ணாத் துயருற்றே - உம்மைத்
தாங்கிய அன்னை துயருற்றாள்

5. மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்
வருத்தினார் தன்னை உம்மோடு

6. நிலையாய் பதிந்தது உம் வதனம் - அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்

7. ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால் - அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்

8. விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்

9. மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் - கால்
ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்

10. உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர் - இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்

11. பொங்கிய உதரம் வடிந்திடவே - உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே

12. இன்னுயிர் அகன்றது உமை விட்டு - பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு

13. துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து - அன்னை
உயிரற்ற உடலின் மடிசுமந்து

14. ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு - நீர்
அடங்கிய கல்லறை உமதன்று

எங்கே சுமந்து போறீர், சிலுவையை நீர், எங்கே சுமந்து போறீர்.
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க, எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறி போலே, துக்கத்துடன் வருந்தி, எங்கே போகிறீர்

2. பாரச்சிலுவையை நீர், பாசத்துடன் அணைத்து,
பாவத்தின் சுமை தாங்கி ஆர்வத்துடன் நடந்து, எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையாய்ச் சுமந்து, எங்கே போன்றீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த, எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள வீரமிழந்து
சீரோன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து, எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும், எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து, எங்கே போறீர்

8. புண்ணிய பெண்மணிகள், புலம்பி அழும் வேளை
தேற்றுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து, எங்கே போறீர்

9. தூரவழிச் சிலுவை தாங்கப் பெலமுமின்ற
மூன்றாம் முறை தரையில், முகம்படிந்தெழுந்தும், எங்கே போறீர்

10 நீடடாடை கழற்றவே, கோடிக் காயங்களலே
இரத்தமாறாய்ப் பெருக, வேதனையால் வருந்தி, தூயா நின்றீர்.

11 நீட்டிய கை கால்களில, நீண்ட இரும்பாணிகள்
நிஷ்டூரமாய் அறைய, நேசத்தினாலே வெந்து பலியானீர்.

12 சிலுவைப பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
நேசப் பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலியானீர்.

13 உமது மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழுசோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்.

15 கல்லைறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.